முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1689

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.05.2024,** செவ்வாய்க்கிழமை

1. ஞானப் பிரம்மமே அரங்கா
ஞானிகளின் சக்தியே அரங்கா
வானவர்கள் போற்றுகின்ற அரங்கா
வள்ளலாக வாழுகின்ற அரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
(குரோதி வருடம் வைகாசி மாதம் 01ம் நாள், 14.05.2024, செவ்வாய்க்கிழமை)
ஆற்றலாக ஆறுமுகன் யான் உன்னுள் கலந்து மாற்றத்தை
உலகில் நடத்தியே தீருவேன் மக்களை எல்லாம் உன்வழி வரச்செய்து
3. செய்துமே உலகம் உன்அவதாரம் போலே
சிறப்பு மிக்க ஞானிகள் பலர் இன்னும் தோன்ற
தோன்றவே கலியுகத்தில் மாற்றம்
தேசிகன் உன்நெறி வழியே நடத்தி அருள்வேன்
4. ஆசி தந்து அரங்கன் யான் உன் சீடர்களோடு
அரங்கன் நீ துவக்கிய
அன்னதானம் கிளைகள் அனைத்திற்கும்
அனைத்திற்கும் ஆற்றல் கூட்டி அருளிவர
5. மாற்றம் உண்டு அரங்கன் தர்மத்தால்
மாற்றம் உண்டு அரங்கன் சன்மார்க்கத்தால்
ஆற்றல் கூட்டி ஆறுமுகன் யான்
அற்புதத்தை கலியில் நடத்தியே தீருவேன்
6. ஆகவே அரங்கனோடு ஆக்கமாக இணைந்துள்ளேன்
அரங்கன் அன்னதானத்தில் யானே சக்தியாக கலந்துள்ளேன்
உள்ளபடி அரங்கன் நாமஜெபம் கூறி
உயர்வாக தர்மம் எங்கெல்லாம் நடக்கின்றதோ

7. வல்லமைபட வேலவன் அங்கு
ஆற்றலாக இறங்கி அவர்களோடு
அருளமுது உண்ணுகின்ற மக்களுக்கும் ஆசி தந்து
ஆசி தந்து ஆக்கமாக கலியுகத்தை மாற்றும் ஞானமாக

8. ஞானயுக மாற்றத்தின் வடிவமாக
ஞானிகளாக ஞானஆட்சி காலமுமாகவும்
நல்வழி காட்டி ஆறுமுகன் யான்
ஞானதேசிகனுக்காய் இந்த உலகில் அற்புதம் புரிவேன்

ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–